# 7.மார்க்சியத் திறனாய்வு

அலகு -5

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- முன்னுரை
- மார்க்சியத் திறனாய்வு
  - 1. இயங்கியல் பொருள் முதல் வாதம் (Dialectical Materialisam)
    - 1.முரண்பாடுகளின் ஒத்திசைவும் போராட்டமும் (Unity and struggle of Opposits)
    - 2. அளவு மாறுபாடு குணவேறுபாட்டினை உருவாக்கும் ( Quantitative change brings Qualitative Change)
    - 3. நிலைமறுப்பின் நிலை மறுப்பு பற்றிய விதி (Law of Negation of Negation)
  - 2. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் (Historiacal Materialism)
    - 1. பழங்கால இனக்குழுப் பொதுவுடைமைச் சமூகம் (Primitive Communism)
    - 2. அடிமைச் சமூகம் (Slavery Society)
    - 3. நிலவுடைமைச் சமூகம் (Feudalism)
    - 4. முதலாளித்துவச் சமூகம் (Capitalism)
    - 5. சமதர்மச் சமூகம் ( Socialism)
  - 3. அடித்தளம் (Base) மேற்தளம் (Super Structure)

- மார்க்சியத் திறனாய்வின் வளர்ச்சி
- உருவமும் உள்ளடக்கமும்
- பிரதிபலிப்புக் கொள்கை
- படைப்பில் சார்பு நிலை
- சீரற்ற வளர்நிலை
- பேரிலக்கியம்
- தீர்வும் கலைப்பண்பும்
- சோசலிசயதார்த்தவாதம்
- தமிழில் மார்க்கியத் திறனாய்வு

# மார்க்சியத் திறனாய்வு

- காரல் மார்க்ஸ் -ஜெர்மன் – தத்துவ அறிஞர் (1818-1883
- பெரெட்ரிக் எங்கெல்ஸ் – (1820-1895)
  - பொதுவுடைமைத் தத்துவம்
  - "மார்க்சியத் தத்துவ அடிப்படையில் இலக்கியத்தை விளக்குகிற முறையிலே" மார்க்சியத்திறனாய்வுக் கோட்பாடு
  - 1848 பொதுவுடைமை அறிக்கை
  - 1. இயங்கியல் பொருள் முதல் வாதம் (Dialectical Materialisam)
  - 2. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் (Historiacal Materialism)
  - 3. அடித்தளம் (Base) மேற்தளம் (Super Structure)

# 1. இயங்கியல் பொருள் முதல் வாதம் (Dialectical Materialisam)

- பொருள் முதல் வாதம்
  - நம்மை சுற்றி இருக்கும் இயற்கைப் பொருள்தான் அனைத்திற்கும் ஆதாரம்
  - நாற்காலி என்ற பொருள் தான் மனிதனின் மனதில் நாற்காலி என்ன கருத்தை உருவாக்குகிறது
- கருத்துமுதல் வாதம்
  - நம்மை சுற்றி இருக்கும் அனைத்துப்பொருட்களுக்கும் அடிப்படையே அப்பொருள் குறித்த கருத்தேயாகும்.
  - நாற்காலி பற்றி கருத்து எற்கனவே மனித மனதில் இல்லாமல் அந்தப் பொருளை நாற்காலியாக மனிதனால் உணரவேமுடியாது
  - மார்க்சியம் முன்மொழியும் வாதம் -பொருள் முதல் வாதம் – இது மூன்று விதிகளை முன்மொழிகிறது.

# 1. முரண்பாடுகளின் ஒத்திசைவும் போராட்டமும் (UNITY AND STRUGGLE OF OPPOSITS)

- எல்லாப் பொருட்களும் தனக்குள்ளேயே முரண்படும் அமைப்பு கொண்டவை
- தனக்கு எதிரான முரண்களைக்கொண்டது
- உடன்பாடு, எதிர்மறை ஆகிய இரண்டு கூறுகள் எப்போதும் வினை புரிந்துகொண்டிருக்கும்
- ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு
- முரண்பாடுகள் சில நேரங்களில் ஒத்திசைவு கொள்ளவும் செய்கின்றன
- ஆனால் அது நிலையற்றது
- முரண்பட்டுப் போராட்ட நிலையில் இயங்குவதே நிலையானது
- நல்லது-கெட்டது, புதிது- பழமை

## 2. அளவு மாறுபாடு குணவேறுபாட்டினை உருவாக்கும் ( Quantitative change brings Qualitative Change)

- பொருட்கள் மாறிக்கொண்டே இருக்கும்
  - தனக்கு உள்ளே இருக்கும் முரண்பாடுகள்
  - பொருட்களின் அளவு மாற்றத்தால்
  - ஒரு குச்சி –எளிமையானது – ஒடிக்கக்கூடியது.
  - பல குச்சிகள் – குண வேறுபாட்டினை உருவாக்கும்
  - வீட்டில் வளரும் குழந்தைகள்

## 3. நிலைமறுப்பின் நிலை மறுப்பு பற்றிய விதி (Law of Negation of Negation)

- தன்னையே அழித்துக்கொள்ளும்
- புதிய பொருளை உருவாக்கும்
- பழைய பொருளிலிருந்து வளர்ச்சியடைந்த பொருள்தான்
- முட்டை -கோழி – முட்டை

# 2. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் (HISTORIACAL MATERIALISM)

- காரல் மார்க்ஸ் கோட்பாடுகள்
  - ஜெர்மன் நாட்டு தத்துவம்
  - பிரெஞ்சு – சமூகவியல் சிந்தனைகள்
  - இங்கிலாந்து – பொருளியல் சிந்தனைகள்
- சார்லஸ் டார்வின் - பரிணாமக் கோட்பாடு
- உயிர்ப் பொருள்களின் வரலாறு
  - தோற்றம், வளர்ச்சி, உச்சம். வீழ்ச்சி, முடிவு

  - 1. பழங்கால இனக்குழுப் பொதுவுடைமைச் சமூகம் (Primitive Communism)
  - 2. அடிமைச் சமூகம் (Slavery Society)
  - 3. நிலவுடைமைச் சமூகம் (Feudalism)
  - 4. முதலாளித்துவச் சமூகம் (Capitalism)
  - 5. சமதர்மச் சமூகம் ( Socialism)

# 3. அடித்தளம் (BASE) மேற்தளம் (SUPER STRUCTURE

- அடித்தளம் – ஒரு சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு
  - சமூகத்தின் அனைத்துக்கூறுகளையும் இந்தப் பொருளாதார சக்திகள்தான்  இயக்குகின்றன.
- மேற்தளம் – அரசியல், சட்டம்,தத்துவம், கலை, இலக்கியம்
  - மேல் தளத்திலிருக்கும் இலக்கியம் கூட அடித்தளத்தில்  இருக்கும் பொருளாதார உறவுகளால்தான் நிர்ணயிக்கப்படுகின்றது.
  - பொருளாதார உறவு இலக்கியத்தைப் பாதிப்பது போலவே இலக்கியமும் பொருளாதார உறவைப் பாதிக்கும் - ஏங்கெல்ஸ்

# மார்க்கியத் திறனாய்வின் வளர்ச்சி

- மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இலக்கியக்கொள்கைகளை நேரடியாக வகுத்தளிக்கவில்லை.
- இலக்கியம் குறித்த பார்வைகள் மட்டுமே
- இலெனின், மா.சே.துங் போன்ற அரசியல் தலைவர்கள்
- டிராட்ஸ்கி, பிளேக்கனெவ்,
- கிறிஸ்டோபர் கால்வெல் – இல்லூஷன் அன்ட் ரியாலிட்டி (Illusion and Reality)
- ரோமண்ட் யாக்கப்சன்
- ஜெர்மனி –ஃபிராங்க்ஃபர்ட் பள்ளி (Frankfurt School) - வால்டர் பெஞ்சமின், தியோடர் அடோர்னா, பெர்டோல்ட் பிரெக்ட்,
- பிரான்சு - அலதூர்

# மார்க்சியத் திறனாய்வாளர்கள்

- இங்கிலாந்து – டெர்ரி ஈகிள்டன்
- இத்தாலி – அந்தோனியே கிராம்சி, ரேமண்ட் வில்லியம்ஸ்
- அமெரிக்கா – ஃபிரடெரிக் ஜேம்சன்
- தமிழில்
  - நா. வானமாமலை, சிதம்பர ரகுநாதன், க. கைலாசபதி, கார்த்திக்கேசு சிவத்தம்பி, நுஃமான், கோ. கேசவன், ஞானி, தி.சு. நடராசன், பொன்னீலன், தமிழவன், முத்துமோகன், அருணன்

# உருவமும் உள்ளடக்கமும்

- அடித்தளம் மேற்தளம் போன்றவை இவை
- உண்மையில் உருவமும் உள்ளடக்கமும் எந்த நிலையிலும் பிரித்துப் பார்க்க முடியாமல் இணைந்து கிடப்பவைகளாகும்

மார்க்சிய அழகியலின் அடிப்படைகள் -ஆன்வர் ஸிஸ்

"உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டும் ஒரே பொருளின் பிரிக்கமுடியாத இரண்டு கூறுகள் என்ற உண்மையில் இருந்துதான் இயங்கியலே தொடங்குகிறது"

இரண்டும் உயிரோட்டமுள்ள ஒருமைப்பாடு.

மார்க்சியத் திறனாய்வு உள்ளடக்கத்திற்கு அதிக அழுத்தம் கொடுக்கிறது.

- உருவமானது உள்ளடக்கத்திற்குப் பொருத்தமாக அமையும் போதுதான் உள்ளடக்கத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. பொருத்தமில்லாமல் அமைந்துவிட்டால் அது உள்ளடக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரும் குந்தகம் விளைவித்து விடும்
- ஹெகல் -
  - "உள்ளடக்கம் என்பது வேறொன்றும் இல்லை உருவத்தை உள்ளடக்கமாக மாற்றுகின்ற ஒரு வேலைப்பாடுதான். அதுபோல் உருவம் என்பதும் வேறொன்றும் இல்லை. உள்ளடகத்தை உருவமாக மாற்றுகிற ஒரு வேலைப்பாடுதான்"

- உருவத்தில் குறையிருந்தால் உள்ளடக்கத்திலும் குறையேற்படும், உள்ளடக்கத்தில் குறையிருந்தால் உருவத்தில் குறையேற்படும்
- கலைப்படைப்பு - புற யதார்த்தங்கள் கலைஞனால் உள்வாங்கப்பட்டு அழகியல் ரீதியாக மாற்றப்பட்டு கலைஞனது அக உணர்வுகளாலும் உயிர்ப்புடன் வடிவமைகப்படுவதுதான்
- உள்ளடக்கம் எனபது வெறுமனே சிந்தனைக் குவியல் அல்ல, மாறாக மனிதர்கள் அனுபவிக்கின்ற மன கற்பனைகள், உணர்ச்சிகள், எதிர்வினைகள், இரசனைகள் ஆகியவற்றின் மொத்தமாகும்.

# தமிழிலக்கியத்தில் உருவம் உள்ளடக்கம்

- சமூக மாற்றத்திற்கேற்ப இலக்கியத்தின் உருவமும் மாறுகிறது.
- இயற்கை நெறி காலம் (சங்க காலம் ) மனிதமனம் – காதல் உணர்வு – அகவல் பா
- நீதிநெறிக்காலம் – அறம் -வெண்பா
- பேராசுகளும் பெருமன்னர்கள் இடைக்காலம் - பண்பாட்டு கலப்புகள் – விருத்தப்பா
- அச்சுக்கலை, நடுத்தர வர்க்கம் – சமூகம் - நாவல், உரைநடை
- உள்ளடக்கம் - நா. வானமாமலை, க. கைலாசபதி, கோ. கேசவன்,
- உருவம் - டி.கே. சி., க.நா.சு., சி.சு. செல்லப்பா,

# பிரதிபலிப்புக் கொள்கை (Reflection Theory)

- எதிரொளிப்புக் கொள்கை - லெனின்
  - புறவய யதார்த்தத்தை இலக்கியம் எவ்வாறு எதிரொளிக்கிறது.
  - யதார்த்தத்தின் புறவயத்தன்மையும் அதை எதிரொளிக்கும் கலைஞரின் அகவயத்தன்மையும் ஒன்றிணையும் படைப்பாக்கநெறிமுறை
  - எதிரொளிப்புக்கொள்கை யதார்த்தத்தை அப்படியே கண்ணாடி போல் எதிரொளிப்பது என்பதல்ல – உடைந்த கண்ணாடி போல் பிரதிபலிக்கவேண்டும் – பியர் மாஷெரி

# படைப்பில் சார்புநிலை

- இரண்டு வகை
- 1. படைப்பாளி யதார்த்த வாழ்வில் எந்த வர்க்கத்திற்கு ஆதரவாகப் பேசியும் எழுதியும் வருகிறாரோ அதற்கு நேரெதிரான வகையில் படைப்புத்தளத்தில் அவர் அறியாமலேயே சார்புநிலை எடுக்கலாம்.
  - பிரெஞ்சு நாவலாசிரியர் – பால்ஜாக் – நிலவுடைமை சமூகம்  எதிரான சார்புநிலையில் இடதுசாரி மனப்பான்மையில் இயங்கி விடுகிறார்.
- 2. படைப்பாளி  தான் வாழும் சமூகத்தில் எந்தச் சக்தி முற்போக்கான பங்களிப்பினை நிகழ்த்திக் கொண்டிருக்கிறதோ அந்தச் சக்தியின் சார்ந்து இயங்கவேண்டும் என்பதில் கறாராக இருக்கிறது.

# சீரற்ற வளர்நிலை – பேரிலக்கியம்

- பொருளாதார அமைப்பு, அரசியல், சட்டம் சமயம் ஆகியவற்றில் சீரான மாற்றங்கள் எப்பொழுதும் நிகழ வாய்ப்பில்லை.
- முதலாளித்துவச் சமூகம் வளர்ந்துகொண்டிருக்கிற இந்தியாவில்தான் பழைய இனக்குழுச் சமூக அமைப்பு, அடிமை முறை சமூக அமைப்பு. நிலவுடைமைச் சமூக அமைப்பு ஆகியவையும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.
- கணினி – கட்டை வண்டி
- கீரேக்கத்தில் ஒழுக்கக்கேடுகள் நிறைந்த காலத்தில்  இலக்கியம் செழுமையாக இருந்தது.

- நாய்க்கறி சாப்பிட்டக் காலத்தில் – தாஜ்மாகால் கட்டப்பட்டது.
- எனவே பொருளாரதார வளர்ச்சிக்கும் பேரிலக்கியங்கள் உருவாவதற்கும் நேரிணையான உறவுநிலை இல்லை.
- ஒருகாலத்தில் உயர்வான இலக்கியமாக கருதப்பட்டவை மாறிப்போன சமூக அமைப்பிலும் பேரில்க்கியமாக கொண்டாடுவதற்கு என்ன காரணம்
  - காரல் மார்கஸ் – குழந்தைப்பருவம் கடந்தவன் குழந்தையை இரசிப்பது போல்தான்
  - இலக்கியங்கள் மறுவாசிப்பு உட்படுத்தப்படும் போது அவை சிறப்பு பெறுகின்றன.

# தீர்வும் கலைப்பண்பும் – சோசலிச யதார்த்தவாதம்

- மார்க்சிம் கார்க்கி 1930 களில் மொழியப்பட்ட இலக்கியக்கொள்கை.
- ஒவ்வொரு எழுத்துக்கும் அறம், பயன், நோக்கம் இருக்கவேண்டும்.
- எழுத்தாளர் – சமூக விஞ்ஞானி
  - எழுத்தாளன் சமூக யதார்த்தத்தைப் படம் பிடிப்பதோடு மட்டுமில்லாமல் சமூகத்தில் தான் கண்டு கூறும் சிக்கல்களுக்கான தீர்வுகளையும் முன்மொழிய வேண்டும் .
  - சமுதாய முரண்பாடுகளுக்கு வரலாற்றியல் முறையிலான தீர்வுகளை எழுத்தாளன் தட்டிலே வைத்துக் தருவதைப் போல மிக வெளிப்படையாக்கக் காட்ட வேண்டியதில்லை. படைப்பின் சூழலமைவு மற்றும் செயல்கள் வழியே தானே செறிந்து புலப்படுமாறு அமைதல் வேண்டும். - ஏங்கெல்ஸ்

# தமிழில் மார்க்சிய திறனாய்வு

- 1917 உருசியா புரட்சிக்குப்பின்
- 1925 இல் இந்தியபொதுவுடைமைக் கட்சி
- பொதுவுடைமைக் கருத்துகள்
  - சுதேசிமித்தரன் பத்திரிகை, நீலகண்ட பிரமச்சரி. திரு.வி.க. எம். சிங்காரவேலு, பெரியார், ஜீவானந்தம், பாரதிதாசன்
  - அ. நடராஜன் – லெனின் – ருஷ்யாவின் விடுதலை வீரன்1937
  - வெ. சாமிநாதசர்மா- காந்தியும் லெனினும் 1937
  - 1947 இந்தியா – இரஷ்யா நட்பு – மொழிபெயர்ப்புகள் பெருகின.
  - டால்சுடாய், அந்தோன் செக்காவ், கார்க்கி, தாஸ்தோவெஸ்கி, மிகயீல் ஷோலகோவ்.

- ப. ஜீவானந்தம் – இலக்கியத்தில் சோசலிஸ்டு எதார்த்தவாதம், சங்க இலக்கியத்தில் சமுதாயக் காட்சிகள்
  - தாமரை இதழ்
  - சங்ககாலம் பொற்காலமல்ல
- குடிமக்கள் காப்பியம்
- பள்ளு, குறவஞ்சி இலக்கியங்கள்
- நா. வானமாமலை, க. கைலாசபதி, கோ. கேசவன்,
- உருவம் - டி.கே. சி. க.நா.சு. சி.சு. செல்லப்பா,
- நா. வானமாமலை, சிதம்பர ரகுநாதன், க. கைலாசபதி, கார்த்திக்கேசு சிவத்தம்பி, நு◌ஃமான், கோ. கேசவன், ஞானி, தி.சு. நடராசன், பொன்னீலன், தமிழவன், முத்துமோகன், அருணன்

# 12. பின்- நவீனத்துவத் திறனாய்வு

அலகு -5

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- முன்னுரை
- நவீனத்துவம்
- பின் நவீனத்துவம்
  - மொழி மையமாதல்
  - அறிவு வணிகமயமாதல்
  - அறிவும் உற்பத்திச் சக்தியும்
  - பெருங்கதையாடல், குறுங்கதையாடல்
  - நகல்களின் ஆட்சி
  - பொருட்களின் அர்த்த மதிப்பீடு
- பின்-நவீனத்துவமும் அதிகாரமும்
- நவீனத்துவம்-பின் நவீனத்துவம் ஓர் ஒப்பீடு
- தமிழ்ச் சூழலில் பின்- நவீனத்துவம்

# முன்னுரை

- பின் நவீனத்துவத்துக்கென தனியான தத்துவார்த்த கோட்பாடுகள் எதுவும் கிடையாது
- ரோலண்ட் பர்த், ழாக் லக்கான், அல்தூசர், தெரிதா, பூக்கோ ஆகிய அமைப்பியல் சிந்தனையாளர்கள்தான் இக்கோட்பாடு உருவாவதற்கும் காரணம்
- இஹாப் ஹாசன், கில்ஸ் டெலியூஸ், ஃபெலிக்ஸ்க் வாத்ரி, ழான் பொதிரியார், ழான் ஃபிரானசுவா லியோதார்த், ஃபிரெடரிக் ஜேம்சன்
-

# நவீனத்துவம்

- நவீனத்துவத்தின் பொதுவான தன்மைகள்
  - 1. மனப்பதிவுகளுக்கு அழுத்தம் கொடுத்தது நவீனத்துவம். எனவே மனத்தைச் சிதையாத ஒருமைப் பொருளாக மையப்படுத்தியது. அதாவது எதைப் பார்க்கிறோம் என்கிற புறப்பொருளைவிட, எப்பிடிப் பார்க்கிறோம் என்கிற அகப்பொருளுக்கு முதன்மை கொடுத்தது.
  - 2. எழுத்துரைப்பில் ஒரு புள்ளியை மையப்படுத்துவது, தெரிவான அறநிலைச் சார்பெடுப்பது முதலியவற்றிலிருந்து விலகி நிற்க முயன்றது நவீனத்துவம்
  - 3. இலக்கிய வகைகளுக்கிடையிலான எல்லைக் கோடுகளை மங்கலாக்கியது. அதனால் நாவல் எழுத்து, கவித்துவம் மிக்கதாகவும் கவிதைப் படைப்பு தகவல் வழங்கும் உரைநடைப் பாணியாகவும் மாறத்தொடங்கின.
  - 4. சிதறுண்ட வடிவங்களை விரும்புவது; தொடர்ச்சியற்ற எடுத்துரைப்பைப் போற்றுவது கொலாஜ் ஓவியப் பாணியை எழுத்தில் கடைப்பிடிப்பது.

- 5. மரபான கலைப் பண்பிற்கு நேர் எதிரான அலைகளை உருவாக்குவதை நோக்கிச் செல்வது. மொத்ததில் இலக்கியத்தில் சோதனைகளையும் புதிய புதிய கண்டுபிடிப்புகளையும் தேடி அலைவதை நோக்கி எழுத்தை நடத்திச் செல்லுதல் என்பது நவீனத்துவத்தின் நோக்கமாக இருந்தது.
- தமிழில் இத்தகைய நவீனத்துவபாணி எழுத்து முறையைக் கடைப்பிடிக்க முயன்றவர்களாகப் புதுமைப்பித்தன், க.நா.சு ., கு.பா.ரா, பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா, சுந்தர ராமசாமி, இந்திரா பார்த்சாரதி முதலியோர்

# பின் நவீனத்துவம்(Post Modernism)

- பின் அமைப்பியலில் இருந்துதான் பின் நவீனத்துவம் தனக்கான கூறுகளை எடுத்துக்கொண்டது.
- லியோதார்த் கூறும்  சிறப்புக்கூறுகள் 3
  - மொழி மையமாதல்
  - கணினி பயன்பாட்டில் மொழியின் பங்கு, தகவல்களைத் திரட்டுதல், சேமித்தல், பெறுதல், நிகழ்ச்சி நிரல் தயாரித்தல், மொழிபெயர்ப்பு செய்தல், சேமிப்புகிடங்கு
  - அறிவ வணிகமயமாதல்
  - அறிவு  மின்னணு தொழில்நுட்பத்திற்கேற்ப வடிவமைக்கப்படுவதால் இப்போது அறிவு தன் சுய தன்மையை இழத்தல்- அறிவு வியாபாரம்.
  - அறிவும்  உற்பத்திச் சக்தியும்

- அறிவும்  உற்பத்திச் சக்தியும்
  - அறிவு உற்பத்திச் சக்தியாக மாறுதல்-
  - அடிமை உடல்களாக மனிதர்கள் உருமாறுதல் –
  - தொழில் நுட்ப வல்லுநர்களின் தேவை அதிகரித்தல்

இவற்றிக்கு எதிராக இலக்கிய எடுத்துரைப்பை முன்னிறுத்துகிறார்

புராணக் கதைகள், நாட்டுப்புறப் பழமொழிகள், நம்பிக்கைகள்

# பெருங்கதையாடல், குறுங்கதையாடல்

- பின் நவீனத்துவத்திற்கு அவசியமானவை
- பெருங்கதையாடல்
  - பெரிய பெரிய தத்துவச் சொல்லாடல்களைக் கட்டமைத்திருக்கும் கான்ட், ஹெகல், மார்க்ஸ், பனுவல்கள்
  - இந்து. இஸ்லாம், கிறித்துவம் மதங்களின் பெரிய பனுவல்கள்

பின் நவீனத்துவம் இவற்றை நிராகரிக்கிறது.

- குறுங்கதையாடல்
  - உம்பர்ட்டோ ஈகோ, ஜார்ஜ் பெரக், தாமஸ் பிஞ்சன், இதாலோ கால்வினோ ஆகியோர் பின் நவீனத்துவ நாவல்கள் எழுதினர்
  - குறுங்கதைகளை நாவல்களாக எழுதுவது
  - இஹாப் ஹசன் - நிச்சயமற்ற தன்மை
  - ழாக் லக்கான் - மையமற்ற தன்னிலை
  - மையத்தை தகர்த்தல்
  - இலக்கியம் மேன்மையானதோ புனிதமானதோ அல்ல மொழி விளையாட்டுதான்
  - எம்.ஜி.சுரேஷ் – சிலந்தி
  - ரமேஷ்-பிரேம் - சொல் என்றொரு சொல்
  - சாரு நிவேதிதா – ஜீரோ டிகிரி

# நகல்களின் ஆட்சி

- 1. உண்மையே இறந்து விட்டது – தொலைக் காட்சிப் பெட்டி , கணினி தான் உலகம்
  - அ. பிளாஸ்டிக் மரம் செடி கொடி பூ , பொம்மைகள்
  - ஆ. ஒரே மாதிரியான ஓவியங்கள்
  - இ. சினிமா நடிகை. மாடல் அழகி பார்த்து மணப்பெண்ணைத் தேடுதல்
  - பொருள்களின் அர்த்த மதிப்பீடு
    - கார்ல் மார்க்ஸ்
    - 1. பயனீட்டு மதிப்பு -
    - 2. விற்பனை மதிப்பு
    - பின் நவீனத்துவ வாதிகள் - அர்த்தம் தரும் மதிப்பு
    - வெளிநாட்டு கார்
    - உலகமயமாதல்

# பின்-நவீனத்துவமும் அதிகாரமும்

- ஃபூக்கோ – அதிகாரம்
- “அதிகாரம் என்பது அறிவு என்ற அமைப்பின் செயல்பாடுகளால் வருவது. அது சமூக ரீதியாக முறைமைப்படுத்தப்படும்போது சட்டமாகவும் சட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனங்களாகவும் மாறிவிடுகிறது. அது ஒற்றைப் பொருள் அல்ல. பன்முகப் பட்டுப் பல பல பகுதிகளாக இயங்குகிறது”
- ஜெர்மன் தத்துவ அறிஞர் நீட்சே
- “மனித உலகம் என்பது அதிகாரத்திற்கான விருப்புறுதியே அல்லாமல் வேறொன்றுமில்லை”

# நீட்சே - அதிகாரம்

- “மனித வாழ்வில் வந்து படிந்துள்ள எல்லாவிதமான நம்பிக்கைகளும் மதிப்பீடுகளும் தங்கள் விருப்புறுதிகளை நிலைநாட்டிக் கொண்டவர்களும் நிலைநாட்டிக்கொள்ளாமல் நசுக்கப்பட்டவர்கள் தங்கள் ஆசைகளை அடைவதற்கான மாற்று வழிமுறைகளைத் தேடியலைகின்றவர்களுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தின் விளைவாக உருவானவைகளே”
- மனித சமூகத்தில் “ உண்மையென்று நிலவும் எல்லா வடிவங்களும் ஆசைகளை வெற்றிகரமாக அடைந்தவர்களுக்கும் அடையாமல் ஒதுக்கப்பட்டவர்களுக்குமான போட்டியில் நிகழ்கின்ற சிந்தனைப் போராட்டத்தின் விளைவுகளே”
- எனவே உண்மைகள் கட்டமைக்கப்பட்டவைகளே

# பூக்கோ - அதிகாரம்

- "அதிகாரத்தின் நுண் அரசியலைக் கட்டுடைத்துப் புரிந்து கொள்வதுதான் இன்றைய மனிதர்களின் அடிப்படைத் தேவை"
- சொல்லாடல் (Discourse)
- அதிகாரமே அனைத்தையும் கட்டமைக்கிறது
- கட்டமைக்கப்பட்ட பிம்பமே உலவுகிறது. அசல் காணாமல் போகிறது.
- அதிகாரம் – ஆதிக்கம் செய்பவர்களையும் பாதிக்கப்பட்ட விளிம்புகளையும் ஒரு சேர உருவாக்கிறது.
- அதிகாரம் அனைத்திலும் நிறைந்து இருக்கிறது. அவற்றை உடைப்பதே பின் நவீனத்துவத்தின் எழுத்து முறையாக இருக்கிறது.
- எழுத்தாளர் தெளிவாக நேரடியாக எதையும் சொல்லாமல் குறிப்பாகவும் புதிர்த்தன்மையோடு சிதைவாக்கங்களோடும் கூடிய ஓர் எழுத்து முறையைப் பின்பற்ற வேண்டுமெனக் கருதுகிறது பின்நவீனத்துவம்

# நவீனத்துவம் – பின் நவீனத்துவம் ஓர் ஒப்பீடு

- இஹாப் ஹசன்
- 1. நவீனத்துவம் நிலையான வடிவம், நிலையான அமைப்பு என்ற கருத்தினை வலியுறுத்தியது. ஆனால் பின் நவீனத்துவம் எல்லாம் மாற்றத்தில் இருக்கின்றன. எனவே, உருவமென ஒன்று இருக்கமுடியாது. உருவமற்ற எழுத்து முறைதான் பின்-நவீனத்துவ எழுத்து முறை என்கிறது.
- 2. நவீனத்துவ எழுத்து முறைக்கு ஒரு நோக்கம் முன்மொழியப்பட்டது. ஆனால் அப்படி ஒரு நோக்கத்தை முன்னிறுத்துவதே அதிகாரக் கட்டமைப்பிற்குத் துணைபோகிவிடும் என்பதால், பின் நவீனத்துவ எழுத்து முறை பகடி செய்து, கிண்டல் அடிப்பதற்கான ஒரு மொழி விளையாட்டாக எழுத்தினைக் கருதுகிறது.

- 3. இந்த மொழி விளையாட்டு அழகியல் இன்பம் தரக்கூடிய இலக்கியப் பிரதியாக வந்து அமைவது எதிர்பாரத சில சந்தர்ப்பவசங்களால்தான என்கிறது பின் நவீனத்துவம். அதனால் தான் எழுத்தை ஒரு நிகழ்வு என்கிறது. ஆனால் நவீனத்துவமோ, எழுத்தை ஒருவரின் படைப்பு என்கிறது. திட்டமிட்டுச் செய்யப்படுவது என்கிறது.
- 4. நவீனத்துவம் ஒரு படிநிலைப்பட்ட அமைப்பினை வலியுறுத்துகிறது. ஆனால் பின் நவீனத்துவம் ஒழுங்குகளின் சிதைவுகளையும் சிதைவுகளால் தாமே அமையும் ஒழுங்கு அற்றவைகளையும் முன்னிறுத்துகிறது.

- 5. நவீனத்துவம் மையப்படுத்துதலை நோக்கி நகர்கிறது. ஆனால் பின் நவீனத்துவம் சிதைப்பதைக் கொண்டாடுகிறது.
- 6. நவீனத்துவம் நிச்சயத்தன்மையை நம்புகிறது. ஆனால் பின் நவீனத்துவம் நிச்சயமற்ற தன்மையை (Indecision) 'இன்மை" யைக் கொண்டாடுகிறது. இத்தகைய இன்மைகளில் (சூன்யம்) இருந்துதான் எல்லாமே பிறக்கிறது என்கிறது.
- 7. நவீனத்துவம் ஒருமைகளையும் ஒற்றுமைகளையும் நம்பிக்கைகளையும் தேடிப் பயணிக்கிறது. ஆனால் பின் நவீனத்துவமோ வேறுபடுத்திப் பார்த்தலையும் சந்தேகங்களைக் கொண்டாடுவதையும் சிறப்பிக்கிறது.

# தமிழ்ச் சூழலில் பின்-நவீனத்துவம்

- அதிகார மேலாண்மைக்கு எதிரான நிலைப்பாட்டினை மேற்கொண்டுள்ளது.
- 1. வளர்சியடை மேலைநாடுகள் x ஏழை மூன்றாம் உலக நாடுகள்
- 2. உலகமயமாதல் x பண்பாட்டின் தனித்தன்மயைக் காப்பாற்றுதல்
- 3. மையத்தன்மை x பன்முகதன்மை
- 4. பெருங்கதையாடல் x குறுங்கதையாடல்
- 5. சமஸ்கிருதம், ஆங்கிலம் x மாநில மொழிகள்
- 7. செவ்விலக்கியக் கவிதை இயல் x மக்கள் இலக்கியம் (நாட்டார் இலக்கியம்)

# பின் நவீனத்துவத்திற்கு எதிர்ப்பு

- இராஜேந்திர சோழன் – தத்துவ அசீரணமும் பின் நவீனத்துவக் கழிசலும் (1997) இரண்டு சிறு தொகுப்புகள்
  - வேறுபடுத்துதல், கருத்தொருமிப்பைச் சிதைத்தல், பகுத்தறிவின் போதாமை, தாக்கத்திற்குட்படாத அறிதல் முறை, அதிகாரத்தின் பன்முகம், பெருங்கதையாடல் குறித்து விவாதிக்கிறார்.
  - ஓர் அராஜகப் போக்கு என்கிறார்.
- கி. வெங்கட்ராமன் - உலக ஆதிக்க சக்திகளுக்கு நடைமுறையில் துணைபோகக்கூடியவைகள்.
- பின் நவீனத்துவம் மார்க்சியம் போன்று எந்த ஒரு த்த்துவத்தையும் முன் வைக்கவில்லை. நவீன சமூகத்தைப் புரிந்து கொள்வதற்குச் சில மரபு மீறிய விதிமுறைகளை முன் வைக்கிறது.